# முகம் தொலைந்தவன்

முஂ முகமது பாட்சா

முகமூடியைக் கழற்றி வைத்தவன்
தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை,
என் முகத்தோடு சாலை முழுவதும்,
பலர் விரவி நடக்கிறார்கள்,
முகப் பிரதிகளால் தொலைந்து போனவன்
வேறு முகமூடிக்குள் நுழைந்து கொள்கிறேன்,
என்னைத் தேடிக் கொண்டிருப்பதாகச் சிலர்
என்னிடமே சொல்லிவிட்டுப் போகிறார்கள்...
என்னையே நான் தொலைத்துவிட்டது
இப்போதுதான் புரிகிறது
கழற்ற முடியாத முகமூடிக்குள்தான்
நான் சிக்கிக் கிடக்கிறேன்...
என் முகம் சில நேரங்களில்
மிருகங்களின் முகங்களை மாட்டிக் கொள்கிறது,
அப்போதெல்லாம்
வேட்டையாடி விளையாடிக் கொண்டிருக்கிறேன்,
சில வேட்டை மிருகங்கள்
என்னை வேட்டையாடத் தேடியலையும் போது
புத்த முகமூடியை பொதிந்து கொண்டுப்
போதி மரத்தின் கீழ் உட்கார்ந்துவிடுகிறேன்,
என் முகப் பிரதிகள் எல்லோரும்
ஆசி வாங்குவதற்காக வரிசையில் நிற்கிறார்கள்...
அவர்களிடம், நான் எப்படிச் சொல்வேன்,
நீங்களெல்லாம் நான்தானென்று !



ஓவியம்: ஜே.கே.



# பிரிவின் வலி

பிரிவின் வலி வழியும் கோப்பையில்
மதுவிருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள்,
நான் இறந்துகிடக்கிறேன் என்பதும் தெரியாமல்
மயங்கிக் கிடப்பதாய் சொல்கிறது அவர்கள் பார்வை,
கனவுகளுக்குள் அழைத்துச் செல்லும் அந்தப் பாதை
நரகத்தில் கொண்டு போய்ச் சேர்க்கிறது...
பூக்களைப் பிரசவிக்க மறந்த தோட்டத்தில்
கள்ளிச் செடிகளெல்லாம் கர்ப்பமாக இருக்கின்றன,
காமதேனுவின் பால்சுரப்பிகளில்
இரத்தம் அருந்துகின்றன ஓநாய் குட்டிகள்,
இரவை போர்த்திக் கொண்டு பகல் உறங்குகிறது,
தேவதைகளின் கூட்டத்தில் தேடியலைகிறேன்...
நீ மட்டும் தனியாக உட்கார்ந்து கொண்டு
என் கவிதையை வாசித்துக் கொண்டிருக்கிறாய்!

# விசித்திர மிருகன்

■ மு. முகமது பாட்சா

வனங்களைத் தின்று கொண்டிருக்கும்
அந்த மிருகம் இதற்கு முன்
வானத்தில் பறவையாகப் பறந்து
ஓசோனில் ஓட்டைப் போட்டு,
கோள்களைத் துப்பிக் கொண்டிருந்ததாம்,
மிருகங்களை வேட்டையாடி
கால்சியம் சேர்த்துக் கொண்ட மிருகம்
எலும்புகளைச் சீரணித்துக் கொண்டு புழுவாக மாறி
பூமிக்குள் நுழைகிறது,
நீரை மொத்தமாக உறிஞ்சிக் குடித்து,
பருத்த அப்புழு
நிலக்கரியைச் சுவைத்து, வாயுக் கனிமங்களில்
மூச்சுக்காற்றை நிறைத்துக் கொள்கிறது,
சேர்த்துவைத்த கால்சியத்தில்
எலும்புகளை உயிர்ப்பித்து ஆடாக மாறி,
பயிர்களையும் மேய்ந்துவிடக்
கயிற்றினில் கட்டப்பட்டு
விசுவாச உயிரியாக மாறிப் போன மனிதன்
நெகிழி தானியங்களையும், முட்டைகளையும்
சுவைத்துக் கொண்டிருக்க... .
ஆடு நெகிழ்ந்து போய்,
அவன் தலையை நாவால்
வருடும் கொடுக்க, அதன் பற்களில்
அவனுடைய ஈரல்கறி ஒட்டிக் கொண்டிருந்தது!